

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி உருவாக்கப்பட்டுள்ள தி.மு.கழகத்தின் ”சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் கழக சட்டத்துறை நிர்வாகிகளின் பணிகளை சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள ‘கலைஞர் அரங்கில்’ நேற்று முன்தினம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். கழகத்தின் வாளும் – கேடயமுமாகத் திகழும் சட்டத்துறையின் பணிகள் குறித்து அதன் நிர்வாகிகளிடம் கேட்டறிந்தார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், மக்கள் நலன் சார்ந்தும் – கழக உடன்பிறப்புகளின் நலன் சார்ந்தும் கழக சட்டத்துறை ஆற்றி வரும் பணிகளை எடுத்துக் கூறினர். “சட்டமன்றத் தேர்தலை ஆக்கப்பூர்வமாக எதிர்கொண்டிடும் வகையில், BLC, BLA2 நிர்வாகிகளின் பணிகளை ஒருங்கிணைப்பது – தேர்தல் சார்ந்த பயிற்சிகளை அளிப்பது உள்ளிட்ட பணிகளுக்கு இப்போதிருந்தே தயாராக வேண்டும் என்பது உட்பட பல்வேறு ஆலோசனைகளை ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் வழங்கினோம். கழகம் மீண்டும் வெல்லும், அதை வரலாறு சொல்லும்” என இது குறித்த பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு சார்பில், கழகத்தின் இலக்கிய அணியின் நிர்வாகிகளை நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து, அவர்களின் பணிகளை ஆய்வு செய்தார். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு இலக்கிய அணி சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் – கழக அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சிக்காகவும் – தமிழ் சான்றோரின் ஏற்றத்துக்காகவும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை இலக்கிய அணியின் மூலம் தமிழ்நாடெங்கும் எடுத்துச் செல்லும் விதம் போன்றவற்றைக் கேட்டறிந்தார். “கழகத்தில் கலைஞர் இயக்கிய அணிகளிலேயே இலக்கிய அணிக்கென்று தனி இடம் உண்டு. அந்த உணர்வோடும் – ஒற்றுமையோடும் 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு உழைத்திடுவோம் என்று தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் ஆலோசனைகளை வழங்கினோம்” என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## இன்று இருக்கின்ற மக்களுக்கு மட்டுமல்லாமல் – எதிர்கால

# சந்ததிக்கும் சேர்த்து சிந்திக்கிறது ‘திராவிட மாடல்’ அரசு!

## திருவொற்றியூரில் – வீட்டுமனைப் பட்டா வழங்கும் விழாவில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை,செப்.5–**

**சென்னை, திருவொற்றியூரில் நடைபெற்ற, 2 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்.**

**இதனைத் தொடர்ந்து இளைஞர் அணி சார்பில், அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்தையும் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் பேசியதாவது:–**

திருவொற்றியூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரம் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகின்ற இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.



நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை அங்கீகரிக்கின்ற வகையில், கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை, அதாவது 40 க்கு 40 தொகுதிகளையும் 100 சதவிகித வெற்றியை, தமிழ்நாட்டு மக்கள் நம் கழகத்திற்கும், நம் முதலமைச்சருக்கும் அளித்திருந்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சென்னை மக்கள் எப்படி வாக்களித்திருக்கிறார்கள் என்று ஒரு ஆய்வு செய்யப்பட்டது. அப்படி வெளியான அந்த ஆய்வில் அடித்தட்டு மக்கள், நடுத்தர வர்க்க மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் கழகத்திற்கு ஒரு மிகப்பெரிய வரவேற்பு ஏற்பட்டு, வாக்குகள் வந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருந்தது.

### அடித்தட்டு மக்கள்

கலைஞர் அவர்களின் தலைமையிலான கழக அரசாக இருந்ததாகட்டும், நம் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசாக இருந்தாலும் ஏழை, எளிய அடித்தட்டு மக்களின், நடுத்தர மக்களின் ஏற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களைத் தருகின்ற அரசாகவே நம் கழக அரசு, ‘திராவிட மாடல் அரசு’ செயல்பட்டு வருகிறது.

கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தே உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்ற அடிப்படைத் தேவைகள், பார்த்து பார்த்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வீடு என்பது அனைவருக்கும் ஒரு அத்தியாவசியமான தேவை. சில பேருக்கு அது ஒரு கனவு. அந்தக் கனவை நிறைவேற்றத்தான் கலைஞர் அவர்கள் 1970களிலே முதன்முறையாக அவர் ஆட்சிக்கு வரும்போது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கினார்.

### கலைஞர் கனவு இல்லம்

இன்று அதனை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று நம் தலைவர் அவர்கள் மேம்படுத்தி இருக்கிறார்கள். எல்லோருக்கும் வீடு கிடைக்க வேண்டும் என நம் தலைவர் அவர்கள், ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தை இந்தாண்டு அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பாகத் தொடர்ந்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

சென்ற ஜூலை மாதம்கூட 925 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஆயிரத்து 600 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை நம் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக கட்டட அனுமதியைப் பெறுவதற்கு ஆன்லைன் மூலம் உடனடியாக வழங்குகின்ற திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

### அடுக்குமாடிக் குடியிருப்புகள்

இந்த வடசென்னைப் பகுதியின் நலனைக் கருத்தில்கொண்டு 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழும் பல்வேறு இடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு மக்களிடம் வழங்கப்பட உள்ளன.

வடசென்னையின் முகத்தையே இந்தத் திட்டம் மாற்றப்போகிறது என்று சொன்னால், அது மிகப்பெரிய பெருமை. வீடு எவ்வளவு முக்கியமோ அதே அளவு அந்த வீட்டிற்கான பட்டாவும் முக்கியம். அந்த வகையில் பார்த்தால், உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நாள் மிகமிக மகிழ்ச்சியான, முக்கியமான நாள்.

‘பட்டா வேண்டும்’ என்ற உங்களின் பல வருட கனவு இன்றைக்கு நனவாகி இருக்கிறது. குறிப்பாக, சென்னையில் நானும், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மக்களவைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது, முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி உங்களுக்கெல்லாம் ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தோம்.

சென்னையில் பட்டா பிரச்சினை பல வருடமாக இருக்கிறது. பட்டா கிடைக்காமல் இருப்பவர்களுக்கு நிச்சயம் பட்டா வழங்கப்படும் என்ற வாக்குறுதியை அளித்திருந்தேன். தேர்தல் முடிவுகள் வந்து மூன்று மாதங்கள் தான் ஆகியிருக்கின்றன. இந்த மூன்று மாதத்திற்குள்ளேயே முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கின்ற வாக்குறுதியைச் செயல்படுத்தி இருக்கிறார்.

பல வருடங்களாக பட்டா இல்லாமல் இருந்தவர்களுக்கு இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசு பட்டா வழங்கி இருக்கிறது. இந்தப் பட்டா பிரச்சினையைக் கையில் எடுத்தபோது உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், இதை எப்படித் தீர்க்கப் போகிறோம் என்ற பல சந்தேகங்கள் இருந்தன. மலைப்பாய் இருந்தது.

இந்தச் சிக்கல்களையெல்லாம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றபோது, எத்தனை சிக்கல்கள் இருந்தாலும் பரவாயில்லை. மக்களின் மகிழ்ச்சிதான் முக்கியம், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிதான் முக்கியம் என்பதை நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தினார்கள்.

ஏனென்றால், உங்கள் வீட்டிற்கான பட்டா என்பது உங்கள் ஒவ்வொருவரின் உரிமை. இந்தச் சிக்கல்களையெல்லாம் தீர்த்து வைத்து, பரிந்துரைகள் வழங்குவதற்கு ஒரு குழுவை நம் முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள். உடனே, எந்தப் பகுதியில் என்ன சிக்கல்கள் இருக்கின்றன, அதை எப்படித் தீர்க்க வேண்டும் என்ற பரிந்துரைகளைத் தயார் செய்து சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் மாவட்ட ஆட்சியர்களிடம் கொடுத்திருந்தோம்.

### சட்டமன்றத் தொகுதிகள்

இதன் காரணமாகத்தான் இன்றைக்கு 28 ஆயிரத்து 848 பயனாளிகளுக்குப் பட்டா தயார் நிலையில் இருக்கிறது. திருவொற்றியூர் தொகுதியில் மட்டும் 7 ஆயிரம் பட்டாக்கள் தயாராக இருக்கின்றன. அதில் இன்றைக்கு 2 ஆயிரம் பட்டாக்களைக் கொடுக்க இருக்கிறோம். சென்னையில் இப்படித் தயார் செய்யப்பட்ட பட்டாக்கள், எல்லா சட்டமன்றத் தொகுதிகளிலும் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக விரைவில் வழங்கப்பட இருக்கின்றன.

நம் திராவிட மாடல் அரசின் முயற்சியால், இன்றைக்கு உங்கள் ஒவ்வொருவரின் கைகளிலும், உங்களின் வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுக்க இருக்கிறோம். “நம் திராவிட மாடல் அரசு, இன்று இருக்கின்ற மக்களுக்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் எதிர்கால சந்ததிக்கும் சேர்த்து சிந்திக்கிறது” என்று நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் இந்தப் பட்டா வழங்குகின்ற நிகழ்ச்சி. இவ்வளவு நாள் சொந்த வீடாக இருந்தாலும் பட்டா இல்லையே என்ற கவலையும், கலக்கமும் உங்களுக்கு இருந்திருக்கும். இனி, அந்தப் பிரச்சினை உங்களுக்குக் கிடையாது. நம் திராவிட மாடல் அரசு இன்று எண்ணற்றத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

### 520 கோடி பயணங்கள்

மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டத்தின் மூலம் 520 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதம் மாதம் ஆயிரம் ரூபாய் இந்த விடியல் பயணம் மூலம் சேமிக்கிறார்கள். மகளிரின் சுமையைக் குறைக்கின்ற வகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார்கள்.

இந்தத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் விரிவாக்கம் செய்திருக்கிறார்கள். முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கின்ற 3 லட்சத்து 25 ஆயிரம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. ‘தமிழ்ப் புதல்வன்’ என்ற திட்டத்தின் மூலம் அரசு பள்ளியில் படித்து, உயர்கல்வியில் சேர்ந்துள்ள 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை பெறுகிறார்கள்.

### மிகப்பெரிய வரவேற்பு

இது எல்லாவற்றையும்விட, மிக முக்கியமான திட்டம் என்றால், கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். இந்தத் திட்டம் பெண்கள் மத்தியில், மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. கிட்டத்தட்ட ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் சென்ற செப்டம்பர் இந்த செப்டம்பர் மாதம் வரை 12 மாதங்களாக மாதம் ஆயிரம் ரூபாய் என்று இதுவரைக்கும் ஒவ்வொரு மகளிரும் 12 ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள்.

இப்படி நம் அரசு தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்ற வகையில், எண்ணற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களின் காரணத்தால்தான் தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பிடித்திருக்கிறது, நம் தமிழ்நாடு.

### திட்டங்களின் பங்கேற்பாளர்கள்

நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளில் ஒன்றாகத்தான் இன்றைக்கு உங்களுக்கெல்லாம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. நீங்களெல்லாம் கழக அரசின் திட்டங்களின் பயனாளிகள் மட்டுமல்ல, நீங்கள் அத்தனை பேரும் இந்தத் திட்டங்களின் பங்கேற்பாளர்கள்.

திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களையெல்லாம் நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு, உற்றார் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டும். இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக மக்களாகிய நீங்கள் தான் இருக்க வேண்டும்.

இந்த திராவிட மாடல் அரசு தொடர்ந்து உங்களுக்கும், உங்களின் அடுத்தடுத்த தலைமுறைக்கும் உழைக்கத் தயாராக உள்ளது. எங்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இந்த அரசைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்தப் பட்டாக்களைத் தயார் செய்ய இரவு பகல் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட குழு மற்றும் அந்தக் குழுவின் சிறப்பு அதிகாரி மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் என் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா பெற்ற அத்தனை பேருக்கும் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டு இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், கே.பி.சங்கர், துரை.சந்திரசேகர், எபினேசர், மருத்துவர். எழிலன், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, சென்னை மாநகராட்சித் துணைமேயர் மகேஷ்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர் அமுதா ஐ.ஏ.எஸ்., சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் தாரேஷ் அகமது ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., நில நிர்வாக ஆணையர் பழனிச்சாமி ஐ.ஏ.எஸ்., நில அளவை மற்றும் நிலவரித்துறை திட்ட இயக்குநர் மதுசூதனன் ரெட்டி ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ராஷ்மி சித்தார்த் ஐ.ஏ.எஸ்., வீட்டு வசதித்துறை வாரியத்தலைவர் பூச்சி முருகன், சென்னை மாநகராட்சி மண்டலத் துணைத்தலைவர் ரவிதேஜா ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், நந்தகோபால், மாவட்ட வருவாய் அலுவலர் அனுசியா தேவி உள்பட கழக முன்னோடிகள், இளைஞர் அணியினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



2026–லும் கழக ஆட்சியை அமைத்திட கழகத்தலைவர் –முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத்தின் சார்பில் சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவை அமைத்துள்ளதறிவோம்! இந்தக்குழுவின் சார்பில் தொடர்ச்சியாக, கழகத்தின் சார்பு அணிகளுடைய பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து வருகிறார். அந்த வகையில், கழகத் தொழிலாளர் அணி நிர்வாகிகளை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்க வளாகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார். ”தொழிலாளர் நலனுக்காக கழக அரசு இந்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தியிருக்கிற திட்டங்களை இன்னும் வேகமாக தொழிலாளர்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். அதிகப்படியான தொழிலாளர்களை கழகத்தின் ஆதரவாளர்களாக உருவாக்கிட களப்பணியாற்ற வேண்டும் என்பன போன்ற ஆலோசனைகளை ஒருங்கிணைப்புக் குழு சார்பில் கூறினார். “கழகத் தொழிலாளர் அணியின் சார்பிலும் பல்வேறு கருத்துக்களை முன் வைத்தனர். அவற்றை ஒருங்கிணைப்புக்குழு சார்பில் கழகத் தலைவர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் செல்வோமென உறுதியளித்தோம்” எனப் பதிவிட்டுள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட கிழக்கு மாநகர கழகத்தின் சார்பாக, இரண்டாவது பொது உறுப்பினர்கள் கூட்டம் திருச்சி கலைஞர் அறிவாலயம் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமை உரை ஆற்றினார். கூட்டத்தில் மாவட்டச் கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், மோகன் பாபு, ராஜ்முகமது, விஜயகுமார், மணிவேல், சிவக்குமார், மாநகர கழக நிர்வாகிகள் நூர்கான், தமிழ்ச்செல்வன், சந்திரமோகன், பொன்செல்லையா, சரோஜினி, மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட, கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.